**செ.வெ. எண்:013** **நாள்:05.01.2017**

# <u>செய்தி வெளியீடு</u>

நாடு முழுவதும் ஒரே சீரான வரிவிதிப்பை ஏற்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) விரைவில் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்கான இணையதளம் மற்றும் மென்பொருளை உருவாக்கும் பணியினை சரக்கு மற்றும் சேவை கட்டமைப்பு (GSTN) நிறுவனம் மேற்கொண்டுள்ளது. இந்த நிறுவனம் ஜிஎஸ்டி தொடர்பாக www.gst.gov.in என்ற இணையதளத்தை உருவாக்கி உள்ளது.

தமிழ்நாட்டில் வரி செலுத்துவோர் அடையாள எண் (TIN) பதிவு பெற்ற அனைத்து வணிகர்களும் இந்த இணைய தளத்தில் பதிவு செய்ய வேண்டும். 01/01/2017 முதல் இந்த பதிவை வணிகர்கள் மேற்கொள்ளலாம். இந்த இணைய தளத்தில் பதிவு செய்ய தற்காலிக ஐடி (ID) மற்றும் பாஸ்வேர்டு (Password) வணிகர்களுக்கு மின்னஞ்சல் மற்றும் வணிகவரித்துறை இணையதளம் <u>https://ctd.tn.gov.in</u> மூலமாக வழங்கப்படும். தற்காலிக ஐடி (ID) மற்றும் பாஸ்வேர்டு பெற்றவுடன் ஜிஎஸ்டி இணைய தளத்தை உபயோகப்படுத்தி இந்த பதிவை பூர்த்தி செய்ய வணிகர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஜிஎஸ்டி பதிவை பூர்த்தி செய்ய <u>https://ctd.tn.gov.in</u> இணையத்தில் உள்ள உதவி கோப்பை (Help File) பயன்படுத்திக் கொள்ளலாம்.

வணிகவரித்துறையின் சார்பில் மாநிலத்திலுள்ள அனைத்து முக்கிய நகரங்களிலும் சிறப்பு முகாம் ஏற்படுத்தப்பட உள்ளது. அனைத்து வணிகர்களும் ஜிஎஸ்டி இணைய தளத்தில் பதிவு பெற இந்த வசதியை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்த முகாம்களின் விவரம் வணிகர்களுடைய வரிவிதிப்பு வட்டங்களில் தெரிந்து கொள்ளலாம்.

**கூடுதல்தலைமை செயலர் /**
**வணிகவரிஆணையர்.**

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**